Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 11 [24-05-93] திங்கட்கிழமை ஓசை 95

## இடம்பெயர்ந்த மக்களுக்கு முன்னைய கிளைகளில் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும் தங்கியுள்ளோர் தமது உலர் உணவு நிவாரண முத்திரைகளுக்கான பொருள்களை தாம் இதுவரை பெற்றுவந்த கூட்டுறவு சங்கங்களிலேயே பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. இடம்பெயர்ந்தோருக்கு இதுவரை காலமும் நிவாரண அட்டைகள் வழங்கப்பட்டுவந்ததும் தற்போது நிவாரண உணவு முத்திரைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. இவ் உணவு முத்திரைகள் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள கிராம சேவகர்கள் மூலமாகவே வழங்கப்பட்டுவருகிறது. இவர்கள் முத்திரைகளுக்கான பொருள்களை தங்கியுள்ள பகுதிகளுக்குரிய சங்கங்களில் பெறுமாறும் பழையசங்கங்களில் பெறமுடியாது

(4 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளுடன் பேசுவது பற்றி அமைச்சர் சவான் என்னுடன் கதைத்தார்

## ஜெயலலிதா பகிரங்க அறிவிப்பு

(சென்னை)

கடந்த நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி மத்திய உள்துறை அமைச்சர் சவான் தம்மைச் சென்னையில் சந்தித்த போது விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றிக் குறிப்பிட்டார். இவ்வாறு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அவ்வறிக்கையில், ராஜீவ் கொலைக்குப் பின் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளுடன் உடன் பேச்சு நடத்துவது எவ்வாறு சாத்தியம் என்று அதிர்ச்சியுடன் தாம் சவானைக்கேட்டதாகவும் ஜெயலலிதா தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஊசலாடுவது நானல்ல; உள்துறை அமைச்சர் சவான் தான். நீண்ட காலமாக விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு கோரிவந்தேன். சட்ட சிக்கல்களைக் காரணம்காட்டி உள்துறை அமைச்சர் சவான் காலம் கடத்திவந்தார் என்றும் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாநிலத்தில் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் சவான் வெளியிட்ட கருத்துக்கு மறுப்புத்தெரிவித்த முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அளித்துள்ள விளக்கம், ஜெயலலிதா நிதானம் இழந்துவிட்டார் என்பதோடு, அவரது அரசியல் முதிர்ச்சியின்மையையும் காட்டுகின்றது என்று தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் கூறியிருக்கிறார்.

தமது அரசு பதவி நீக்கம் செய்யப்படும் அபாயம் எதுவும் இல்லை என்று கூறிய முதலமைச்சர், மறுநாளே தமது ஆட்சியைக் கலைக்க மத்திய அரசு திட்டமிடுகிறது என்று அவர் கூறியிருப்பது அவரது



ஆத்திரத்தையும், கோபதாபத்தையும் காட்டுகிறது என்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கூறியிருக்கின்றார்.

## புலிகளுடன் பேசலாமென நான் கூறவில்லை

### இந்திய உள்துறை அமைச்சர் மறுப்பு

(டில்லி)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தமாறு சென்னையில் தன்னைச் சந்தித்த மத்திய அமைச்சர் சவான் புலிகளுடன் பேச்சு அமைச்சர் சவான் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கிளாலி – பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாம். மாவட்ட வருவாய்ப்

## ஜெயலலிதா - ஆளுநர் 40 நிமிடங்கள் பேச்சு

### அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாம்

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மாநில ஆளுநர் பீஷ்மன் நாராயண் சிங்கை நேற்று காலை ஆளுநர் மாளிகையில் சந்தித்து 40 நிமிடங்கள் பேசினார்.

தமிழக நிலவரம் குறித்து அவர் ஆளுநரிடம் எடுத்து கூறினார். முதலமைச்சரின் வேண்டுகோளின் பேரிலேயே இந்த சந்திப்பு நடந்தது. இது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு என இந்திய வானொலி கூறியது.

மாமண்டூர் அருகே மூன்று விடுதலைப்புலிகள் சந்தேக நபர்கள் பொலிஸில் இருந்து மீட்கப்பட்டதைசுட்டிக்காட்டி மத்திய அமைச்சர் சவான் தமிழக அரசு விடுதலைப்புலிகள் விடயத்தில் மெத்தனமாக இருப்பதாக தெரிவிக்க அதை முதலமைச்சர் மறுத்து அறிக்கைவிட அவ்வறிக்கையை அமைச்சர் சவான் கண்டித்துள்ள நிலையில் ஆளுநருடனான முதலமைச்சர் சந்திப்பு நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## தமிழக ஆளுநர் இராஜினாமா புதியவர் உடன் நியமனம்

(சென்னை)

தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண்சிங் நேற்று இராஜினாமாச் செய்துள்ளார். அவரது இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகப் புது மாளிகைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவருக்குப் பதிலாக ராஜஸ்தான் ஆளுநர் எம். சென்னாரெட்டி தமிழக ஆளுநராக நியமனம்பெற்றுள்ளார்.

நாராயண்சிங்கை தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா சந்தித்து மாநிலத்தின் இன்றைய ஒட்டுமொத்தமான நிலைகுறித்து ஆராய்ந்ததாக ஆளுநர் மாளிகை தெரிவித்

யுடன் தாம் சவானைக்கேட்ட தாகவும் ஜெயலலிதா தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஊசலாடுவது நானல்ல; உள்துறை அமைச்சர் சவான் தான். நீண்ட காலமாக விடுதலைப் துள்ளார்.

இதேவேளை மாநிலத்தில் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் சவான் வெளியிட்ட கருத்துக்கு மறுப்புத்தெரிவித்த முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அளித்துள்ள விளக்கம், யிருக்கிறார்.

தமது அரசு பதவி நீக்கம் செய்யப்படும் அபாயம் எதுவுமில்லை என்று கூறிய முதலமைச்சர், மறுநாளே தமது ஆட்சியைக் கலைக்க மத்திய அரசு திட்டமிடுகிறது என்று அவர் கூறியிருப்பது அவரது



ஆத்திரத்தையும், கோபதாபத்தையும் காட்டுகிறது என்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கூறியிருக்கின்றார்.

காலை ஆளுநர் மாளிகையில் சந்தித்து 40 நிமிடங்கள் பேசினார்.

தமிழக நிலவரம் குறித்து அவர் ஆளுநரிடம் எடுத்து கூறினார். முதலமைச்சரின் வானொலி கூறியது.

மாமண்டூர் அருகே மூன்று விடுதலைப்புலிகள் சந்தேக நபர்கள் பொலிஸில் இருந்து மீட்கப்பட்டதை சுட்டிக்காட்டி மத்திய அமைச்சர் சவான் அறிக்கைவிட அவ்வறிக்கையை அமைச்சர் சவான் கண்டித்துள்ள நிலையில் ஆளுநருடனான முதலமைச்சர் சந்திப்பு நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# புலிகளுடன் பேசலாமென நான் கூறவில்லை

## இந்திய உள்துறை அமைச்சர் மறுப்பு

(டில்லி)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைநடாத்துமாறு தான் கூறவில்லை என மத்திய உள்துறை அமைச்சர். எஸ்.பி. சவான் கூறியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் கடந்த நவம்பர் மாதம் சென்னையில் தன்னைச் சந்தித்த மத்திய அமைச்சர் சவான் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம் என கூறியதாக தெரிவித்திருந்தார்.

ஜெயலலிதாவின் இந்தக் கூற்று முற்றிலும் ஆதாரமற்றது இப்படியான எந்த சிபார்சையும் தான் ஜெயலலிதாவிடம் கூறவில்லை என அமைச்சர் சவான் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் தன்னைக் காத்துக் கொள்ள தவறான ஒரு கருத்தை வெளியிட்டிருப்பது துரதிர்ஷ்டவசமானது என்றும் மத்திய அமைச்சர் சவான் கூறியுள்ளார்.

## கிளாலி — பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

# தமிழக ஆளுநர் இராஜினாமா புதியவர் உடன் நியமனம்

(சென்னை).

தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண்சிங் நேற்று இராஜினாமாச் செய்துள்ளார். அவரது இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகப் புதுடில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவருக்குப் பதிலாக ராஜஸ்தான் ஆளுநர் எம். சென்னாரெட்டி தமிழக ஆளுநராக நியமனம்பெற்றுள்ளார்.

முன்னதாக ஆளுநர் பீஷ்ம நாராயண்சிங்கை தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா சந்தித்து மாநிலத்தின் இன்றைய ஒட்டுமொத்தமான நிலைகுறித்து ஆராய்ந்ததாக ஆளுநர் மாளிகை தெரிவித்திருந்தது.

# தமிழக அரசை கவிழ்ப்பதற்கு காங்கிரஸ், உளவுத்துறை சதி!

## தமிழக முதலமைச்சர் குற்றச்சாட்டு

(சென்னை)

காங்கிரஸ் கட்சியும், மத்திய உளவு நிறுவனங்களும் தமது ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்வதாகவும், மாமண்டூர் அருகே மூன்று 'புலிகள்' தப்பி ஓடியதற்கும் உளவுத்துறையினருக்கும் சம்பந்தமிருப்பதாக தான் சந்தேகிப்பதாகவும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பகிர…கமாக குற்றம் சாட்டினார்.

மாநில அரசுக்கு எதிராக பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. இதற்கான சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியில் அது ஈடுபட்டுள்ளது. எனவும் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் சவான் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் தமிழக அரசு ஊசலாட்டத்தில் உள்ளது. என்று கூறிய கருத்துக்கு மறுப்பு தெரிவித்து ஜெயலலிதா நேற்று முன்தினமிரவு சென்னையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது மாமண்டூர் அருகே மூன்று போராளிகள் தப்பிய சம்பவத்திற்கும் மத்திய உளவு நிறுவனத்திற்கும் சம்பந்தம் உண்டு எனத் தாம் சந்தேகிப்பதாகவும் கூறிய அவர் சைதாப்பேட்டையிலிருந்து சார்ள்ஸ் நவாஸ் என்ற ராஜீவ் வழக்கில் முக்கிய சாட்சி தப்பியோடியது குறித்து கருத்துத் தெரிவித்தபோது அவரை மத்திய புலனாய்வுத்துறை ஏன் சரியாக கண்காணிக்கவில்லை

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# ஜெனரல் சேபால ஆட்டிக்கலவிற்கு பாதுகாப்பு ஆலோசகர் பதவி

(கொழும்பு)

ஜெனரல் சேபால ஆட்டிக்கல தேசிய பந்தோபஸ்து ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏயர் சீவ் மார்சல் வால்டர் பனான்டோ லங்காபுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

1942-ம் ஆண்டு 2-ம் உலக மகாயுத்தம் நடைபெற்றபோது இலங்கைக் காலாற் படையின் 2-ம் லெப்டினன்டாக இராணுவத்தில் சேர்ந்த ஆட்டிக்கல இறுதியில் இராணுவத் தளபதியாக கடந்த பத்து ஆண்டுகள் பதவி வகித்தார். அதன்பின் அவர் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராகவும் பாதுகாப்பு செயலாளராகவும், கடமையாற்றினார். இலங்கையிலுள்ள ஒரேயொரு ஐந்து நட்சத்திரம் பெற்ற ஜெனரல் இவரேயாவார்.

எயர்லங்கா தலைவராக நியமிக்கப்படும்வரை அவர் லண்டனில் இலங்கை உயர் ஸ்தானிகராக கடமையாற்றினார்.

## ஆயுர்வேத பரீட்சை

(யாழ்ப்பாணம்)

லங்கா ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மாணவர்களுக்கான டி.ஏ எம் பரீட்சை விரைவில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஆயுர்வேதத் திணைக்களத்தில் ஒப்படைத்து இப்பரீட்சைக்கான திகதியையும் தீர்மானிப்பதற்காக மேற்படி கல்லூரியின் பதிவாளர் டாக்டர் திருமதி கமலலோஜனி குமண கப்பல் மூலம் கொழும்பு சென்றுள்ளார் என இக்கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அமைதியை ஏற்படுத்த மீண்டும் யாழ். செல்லத்தயார்

## -அங்கிலிக்கன் ஆயர்

நாட்டில் அமைதியை ஏற்படுத்த மீண்டும் யாழ்ப்பாணம் செல்லத்தயார் என அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் வண. கென்னத் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் மத நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட கென்னத் மேற்கண்டவாறு தனது விருப்பைத் தெரிவித்தார். இந் நாட்டில் அமைதி, சமாதானம் ஏற்படுத்த அனைத்து மதப்பெரியார்களும் ஏனைய சக்திகளும் உளப்பூர்வமாக உழைக்கவேண்டும் மத, இனங்களிடையே ஒற்றுமை உறுதிசெய்யப்பட வேண்டும் என அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னான்டோ மேலும் தெரிவித்தார்.

# ஜெயலலிதா அரசை கலைக்க தி. மு. க. கோரிக்கை

(சென்னை)

தமிழ் நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலை சீர் குலைந்திருப்பதால் மத்திய அரசு செல்வி ஜெயலலிதாவின் அரசைக் கலைக்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கோரியிருக்கிறது.

உத்தரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதாக்கட்சி அரசை நீக்கியபோது அங்கிருந்த நிலையைப் போலவே தமிழ் நாட்டிலும் சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்திருப்பதாக தி. மு கவின் தலைவர் மு. கருணாநிதி திருச்சியில் செய்தியாளரிடம் பேசும்போது தெரிவித்தார்.

அரசியல் அமைப்புச் சட்டத்தில் 356 ஆவது பிரிவைப் பயன்படுத்தி மாநில அரசுகளை மத்திய அரசு கலைப்பதைத் தமது கட்சி எதிர்த்து வந்திருந்ததாவும், உத்தரப் பிரதேச அரசைக் கலைத்தபோது தி. மு. க. கண்டனம் தெரிவிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தென், வடமேல் மாகாணசபை விவகாரம்

# அடுத்த கட்ட நடவடிக்கை; எதிரணி இன்று ஆராயும்

(கொழும்பு)

தெற்கு மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சியை ஆட்சி அமைக்க மாகாண ஆளுநர்கள் அழைத்திருப்பதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்க எதிர்க்கட்சிகள் இன்று கூடவுள்ளன.

முக்கிய எதிர்க்கட்சிகளான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இது குறித்து இன்று கூடி ஆராயவுள்ளன.

இம் மாகாணங்களில் ஐக்கிய தேசியக்கட்சி தனித்து பெரும்பான்மை ஆசனங்க

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வேப்பெண்ணை

வேப்பெண்ணைக் கிருமி நாசினி உங்கள் தோட்டப் பயிர்களையும், எலுமிச்சை, தோடை இனங்களை அழிக்கும் பூச்சிகளையும். நோய்களையும் முற்றாகக் கட்டுப்படுத்த வல்லது இது மருந்து தேவைகளுக்கும் பாவிக்க உகந்தது. பாவித்து பயன் பெறுங்கள். எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி 34, ஆடியபாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (4938)

### வேப்பம் உரம்

வேர்பு தரும் வேப்பம் உரம் மண்ணிலிருக்கும் பூச்சி, புழுக்களை அழித்து — மண்ணை வளப்படுத்தி பயிர்களை செழித்து வளரச் செய்யும் அபூர்வ உரம். பாவித்து பயனடையுங்கள். எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி, 34 ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (4939)

### தேவை

(1) 500(w) ஜெனரேட்டர், (2) 23 கேச் டைனமோவுக்கான ம்பி. இப்பொருட்கள் தேவைப்படுவதால் விற்பனை செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். விலை பேசித் தீர்க்கப்படும். விள இல 189 மே / பா. ஈழநாதம் மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் (4945)

### துளிர்

தமிழ்நாடு. புதுவை அறிவியல்இயக்கம் வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா றோட், யாழ்ப்பாணம். [4923]

### தனிடைனமோ (DYNAMO) தேவை

10K V க்கும் 15K V க்கும் இடைப்பட்ட நல்ல நிலையில் உள்ள தனி (DYNAMO) உடன் தேவை. வைத்திருப்பவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்: துரை மோட்டார் உயிரூட்டகம், பருத்தித்துறை வீதி கொடிகாமம். (சி/6670)

### அதிக வாக்கு


## ஆசிரியர் பயிலுநர் பரீட்சை இம் மாத இறுதியில்

(கொழும்பு)

அடுத்தமாதம் 7ஆம், 8ஆம் திகதிகளுக்கு பிலபோடப்பட்ட ஆசிரியர் பயிலுநருக்கான முதலாவது பரீட்சை இம்மாத இறுதியில் நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். இப் பரீட்சை இம்மாதம் 28-ம் திகதி வெள்ளி, 29-ம் திகதி சனி ஆகிய நாட்களில் நடைபெறும்.

வடக்கு கிழக்கு உட்பட நாடுமுழுவதும் 14 நிலையங்களில் நடைபெறும் இப்பரீட்சையில் 28,000 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

பரீட்சார்த்திகளுக்கு புதிய அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன.

## முதலமைச்சர் தெரிவு; முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு

(கொழும்பு)

தென்மாகாணம், வடமேல் மாகாணசபை முதலமைச்சர்கள் நியமிக்கப்பட கடைப்பிடிக்கப்பட்ட பிரமாணங்களை முஸ்லிம் காங்கிரஸ் கண்டித்துள்ளது

இம் மாகாண சபைகளில் எதிரணியினர் கூட்டுச் சேர்ந்த நிலையில் அவர்கள் கூடிய ஆசனங்களை தக்கவைத்துக் கொண்ட நிலையிலும் ஐ தே.க வேட்பாளரை முதலமைச்சராக நியமிக்க மாநில ஆளுநர்கள் அழைத்தது விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டது என எதிரணியினர் குற்றஞ்சாட்டி வருவது தெரிந்ததே.

பிரேமா கொலை தொடர்பாக

## கைதான 10 பேரில் 9 தமிழர்கள்

(கொழும்பு)

பிரேமதாசா கொலை தொடர்பாக இதுவரை கைதான 10 பேரில் ஒன்பது பேர் தமிழர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. மற்றையவர் சிங்கள வர்த்தகர். இவர்களை விசேட விசாரணைக் குழு விசாரித்து வருகிறது.

கைதான 9 தமிழர்களும் முன்பு வடக்கில் வசித்தவர்கள் என்றும் இவர்கள் தற்போது கொழும்பில் இருந்தவர்கள் என்றும் விசாரணைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## கிழக்கு பல்கலைக்கழகம்; மருத்துவபீடம் ஆரம்பிக்கும்

(மட்டக்களப்பு)

கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது இதற்கு முன்னோடியாக மட்டக்களப்பு மாகாண வைத்திய சாலையை அபிவிருத்திசெய்து ஒரு போதனா வைத்திய சாலையாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதத்திற்கு முன்பு கணிசமான அளவு அபிவிருத்தி வேலைகள் பூர்த்தியாக்கப்படும் எனக் கூறப்படுகிறது. இதற்கென 34 இலட்சம் ரூபா செலவு செய்யப்படும்.

### மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை வெல்வில் அருள் மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மஹோற்சவம் இன்று கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகின்றது.


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப் பிறப்பு 12 — 01 — 1973



வீரச் சாவு 25 — 05 — 1992

### இளம்புலி மரகதம்

(ஏ. சாரதாதேவி)

(கண்ணகை அம்மன் கோவிலடி அல்வாய் தெற்கு, அல்வாய்)

சுவடுகளை இரத்தத்தால் பதித்துவிட்டு;
சுடராக எரிந்தாயே மணலாற்றில்;
கூவக் குரலெடுத்த குயிலெநீ வசந்தத்தை
குறித்துக் களமாடி தாய்மண்ணில் வீழ்ந்தாயோ?
சாவதைச் சரித்திரமாய் சந்ததிக்குச் சமர்ப்பித்து;
சாதனை புரிந்தவளே! சிங்களத்துச் சிப்பாய்கள்
நாவலறி ஓடவைத்து; நாடுகாத்த இளம்புலியே!
நாமம் அழியாது; நம்வீர அஞ்சலிகள்.

—குடும்பத்தினர்

(4943)

## 6-ம் மாத நினைவலைகள்



## நீங்காத 6-ம்மாதநினைவில் எம் டொச்சன்



மழலையாக 1966-02-21

மாவீரனாக 1992-11-24

### மேஜர் டொச்சன் [தமிழரசன்]

தொலைந்துபோன அந்தநாள்
உன்னை எம்மிடத்தில்- இருந்து
நிரந்தரமாகவே பிரித்து விட்டது
கடந்ததோ ஆறுமாதங்கள்
பலாலி எதிரிகள் பாசறை - மீதில்
புலி வீரன் நீ புயலாய் பாய்ந்தெழுந்து
நீண்ட காவலரண்களை அழித்தாய் - ஆனால்
அச்சமரினிலே உடலில் குண்டு ஏந்தி
மாவீரன் டொச்சன் ஆனாய்
நீ எம் நெஞ்சுக்குள்ளே - இருக்கின்றாய்
அதனால் தான் இமைகளில்
அடிக்கடி ஈரம் கசிகிறது.
உன் ஆத்ம சாந்தி வேண்டி நிற்கும்

குப்பிளான், ஏழாலை. (4946) பொ. இராசையா குடும்பத்தினர்.

## 6-ம் மாத இதயக் கீறல்கள் கப்டன் மலரவன்

(லியோ, புயற்பறவை)

[காசிலிங்கம் விஜிந்தன்]

மலரவன்
அதீத திறமைகளுடன்...
உலா வந்த பாலகன்
தூய்மையில், நேர்மையில்
இமயத்தை வென்றவன்
இவன் இல்லையென்று...
நினைவுகள் மோதி சத்தம் எழும்

## தவறிவிட்டது

22-05-93 சனிக்கிழமை இரவு சித்தன்கேணிக்கும் சங்கானைக்கும் இடையில் கறுப்புநிற தோல் பை ஒன்று பெறுமதியான பொருட்களுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

பத்மநாதன் நித்தியானந்தம்

சங்கானைகிழக்கு, சங்கானை. (4947)

## Post of Project Officer

(Education and Management)

Applications are invited for the above post from energetic graduates under the age of 40 yrs Applicants should have an aptitude to travel and able to converse in English. Preference will be given to married persons. Applications should be sent under registered post marked on the left hand corner of the envelope - "Post of Project Officer" - addressed to: The Hony: Secretary Shri Lanka Red Cross Society, Jaffna Branch, 73, Kandy Road, Jaffna to reach on or before 15th June 1993. Applications can be handed over at office to the Administrative Officer and acknowledgement obtained from him.

Shri Lanka Red Cross Society, Jaffna Branch 73, Kandy Road Jaffna. Hony Secretary. (சி-6677)

## நினைவு கூருகின்றோம் ...

இதழ் மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா றோட், யாழ்ப்பாணம். [4923]

## தனிடைனமோ (DYNAMO) தேவை

10K V க்கும் 15K V க்கும் இடைப்பட்ட நல்ல நிலையில் உள்ள தனி (DYNAMO) உடன் தேவை. வைத்திருப்பவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்: துரை மோட்டார் உயிரூட்டகம், பருத்தித்துறை வீதி கொடிகாமம். (சி/6670)

## அதிக வாக்கு பெற்ற பெண்

(கொழும்பு)

மிக அதிகப்படியான விருப்பு வாக்குகளை பெற்ற முதலாவது இலங்கைப்பெண் என்ற பெருமையை திருமதி சந்திரிகா குமாரணதுங்க பெற்றுள்ளார். நடந்த மாகாண சபை தேர்தலில் கம்பஹாவில் போட்டியிட்ட இவர் இரண்டு லட்சத்து தொண்ணூற்று எட்டாயிரம் வாக்குகளைப் பெற்றார்.

## மெய்வல்லுநர் போட்டி

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும்செவ்வாய்க்கிழமை 2 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக பிரதேச கல்விப்பணிப்பாளர் ரா. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார்.

★

வேலணைக் கோட்டக் கல்விப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற உள்ளது.

## கடைகள் மூடப்பட்டன

குருநகர் வர்த்தகர் சங்கத்தின் தீர்மானத்துக்கிணங்க குருநகர் பகுதியில் இருக்கும் சகல வியாபாரத்தலங்களும் சென்ற சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் மூடிக்கிடந்தன. சனிக்கிழமை 2 மணியுடன் கடைகள் மூடப்பட்டிருந்தன.

இங்கிருந்த பேக்கரிகள், துவிச்சக்கர வண்டி திருத்துமிடங்கள், மருந்துச்சாலைகளை விட இம்முறை சங்கத்தின் தீர்மானம் பூரணமாக பின்பற்றப்பட்டமை இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது (17)

---


நாமம் அழியாது; நம்வீர அஞ்சலிகள்.

–குடும்பத்தினர்

(4943)

---

# 6-ம் மாத நினைவலைகள்



## மேஜர் தமிழரசன் [டொச்சன்]

(கந்தசாமி ஜெயக்குமார்)

(புன்னாலைக் கட்டுவன வடக்கு)

தாயின் மடியில் 21. 02. 1966 — தாயக மண்ணில் 24. 11. 1992

உன குரல கேட்டு நகர்ந்ததோ ஆறு மாதங்கள்,
இலலை. இல்லை நம்பவே முடியவில்லை,
சிறி சிறியண்ணா, சிறிமாமா என்றழைத்த
எங்களது எல்லோர் உள்ளத்திலும துயரவெள்ளத்தைத் தந்து
தமிழீழமண்ணை மீட்டிட இன்னுயிர் ஈந்தாய்
நீ புன்னாலைக்கட்டுவனில் பூதத மலரல்லவா
தாயக மண்ணின் விடிவுக்காக கடமை
ஒன்றே கண்ணாய் நின்றாய்
கழுத்தில் நஞ்சைக் கட்டிக் கொண்டாய்
களத்தில் சாதனைகள் ஆயிரம் படைத்தாய்
சிங்களப்படையினை சிதறிடச் செய்தாய்
அச்சுவேலி மண்ணிலே வீரச்சாவை தழுவினாய்
இன்று நீ எம்முடன் இல்லையே தாங்கமுடியவில்லையே
இன்றும் உன்செயல் வீரம் எம் நினைவில் நிலைக்கின்றது
இந்த தமிழீழ மண்ணிலே பிறந்த மாவீரன்
தமிழரசனை நாம் மறப்போமா
உன் இலட்சிய தாகம் நிறைவு பெற
மீண்டும் மீண்டும் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவினால் துயருறும்
மாமா, மாமி,
ரவிஅத்தான், அக்கா,
மச்சான்மார், மச்சாள்மார்.
மழலைச் செல்வங்களான
மருமக்கள் மற்றும்
அம்மம்மா, தம்பி, தங்கை

நா பூபாலராஜா குடும்பத்தினர்
முரளிதரன் லேன்,
தொலைபேசி நிலையம்,
மானிப்பாய் மேற்கு
மானிப்பாய்.

(4912)

---

நீ எம் நெஞ்சுக்குள்ளே - இருக்கின்றாய்
அதனால் தான் இமைகளில்
அடிக்கடி ஈரம் கசிகிறது.

உன் ஆத்ம சாந்தி வேண்டி நிற்கும்
பொ. இராசையா
குடும்பத்தினர்.

குப்பிளான்,
ஏழாலை.

(4946)

---

# 6-ம் மாத இதயக் கீறல்கள்

## கப்டன் மலரவன்

(லியோ, புயற்பறவை)

[காசிலிங்கம் விஜிந்தன்]

மலரவன்
அதீத திறமைகளுடன்...
உலா வந்த பாலகன்
தூய்மையில், நேர்மையில்
இமயத்தை வென்றவன்
இவன் இல்லையென்று..
நினைவுகள் மோதி சத்தம் எழும்
உணர்வுகள் களைத்து விழும்
நெஞ்சம் தாங்காது! தாங்காது!
மீண்டும் மீண்டும்

அவன் வரவிற்காய் ஏங்கும்
– குடும்பத்தினர்.

(4944)

---

# 45-ம் நாள் நினைவஞ்சலி

தமிழீழ மண்ணில் 27 — 09 — 1973



தமிழீழப் போரில் 10 — 04 — 1993

## கப்டன் நீலவண்ணன் (இம்றான்)

(அருளையா செந்தில்ராஜ்)

சுதுமலை வடக்கு, மானிப்பாய்

செந்தமிழ் வாழ செருக்களமாடினாய் – நம்
எந்தையர் புகழை எதிரிக்கு புகட்டினாய்
பந்துபோல் பாய்ந்து படை பல விரட்டினாய்-இன்று
நொந்து தவிக்கின்றோம் உன்பிரிவால் நாமும்
அன்னை மடியில் 'செந்தில்' ஆனாய்
அண்ணன் வழியில் 'நீலவண்ணன்' ஆனாய்
அறவழி வேள்வியில் ஆகுதியானாய் இன்று
அமைதியுடன் துயில் கொள்ளும் மாவீரன்' ஆனாய்.

இன்று 24-05-1993 திங்கட்கிழமை உற்றார். உறவினர், சகல போராளிகள், நண்பர்களையும் எமது இல்லத்தில் மதியபோசனத்திற்கு வருமாறு அழைக்கின்றோம்.

தாய், சகோதரர்கள்,
மச்சான்மார், மச்சாள்மார்,
மருமக்கள், நண்பர்கள்.

[4937]

---

Applications are invited for the above post from energetic graduates under the age of 40 yrs Applicants should have an aptitude to travel and able to converse in English. Preference will be given to married persons. Applications should be sent under registered post marked on the left hand corner of the envelope - "Post of Project Officer" - addressed to: The Hony. Secretary Shri Lanka Red Cross Society, Jaffna Branch, 73 Kandy Road, Jaffna to reach on or before 15th June 1993. Applications can be handed over at office to The Administrative Officer and acknowledgement obtained from him.

Shri Lanka Red Cross Society, — Hony Secretary.
Jaffna Branch
73, Kandy Road Jaffna.

(சி-6677)

---

# நினைவு கூருகின்றோம் ... 1993-05-24

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொது மகன்.

1985ஆம் ஆண்டு திருமலை-பன்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 09 தமிழர்கள்

1987ஆம் ஆண்டு மட்டு-தாண்டியடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

றிச்சாட் (செல்லத்துரை கிருபைராசா - பெரியபுல்லுமலை-மட்டு)

இதே ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

★ செல்வன் (நடராசா லிங்கரெட்ணம்-பாலம்போட்டாறு-தம்பலகாமம்-திருமலை)

★ மணியண்ணன்/செல்வன் (வே.தெய்வநாயகம்-முள்ளிப்பொத்தானை, கந்தளாய் திருமலை)

1988ஆம் ஆண்டு மணலாறு - நித்திகைக்குளம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

லெப்.விக்கி (மேகவர்ணசாமி சிறிகிருஷ்ணன்-நெடியகாடு,வல்வெட்டித்துறை-யாழ்)

குட்டி (—நவாலி-யாழ்)

யாழ்-சாவகச்சேரி கல்வயல் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

கப்டன் நகுலன் (வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன்-நகுலேஸ்வரன் வீதி, மீசாலைவடக்கு, கொடிகாமம்-யாழ்)

1992ஆம் ஆண்டு மட்டு-ஊத்துச்சேனையில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

இதயதீபன்/பரீத் (ஏகாம்பரம் லிங்கநாதன்-குருமன்வெளி-மட்டு)

திருமலை-கட்டைபறிச்சான் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் பலியான 12 தமிழர்கள்,

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6676)

### சிந்தனைக்கு

பின்னால் வரக்கூடிய நிகழ்வுகளை எதிர்நோக்கி நிற்பவர் விவேகமுள்ள அரசியல்வாதி. நடந்துவிட்ட நிகழ்வுகளால் நடத்தி செல்லப்படுபவர் விவேகமற்றவர்.

–லெனின்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## ஜெயலலிதாவின் அவலம்

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் இன்றைய நிலை மிகவும் பரிதாபகரமானது. தான் வளர்த்த மாயைக்கு தானே பலியாக வேண்டிய நிலையில் அவர் உள்ளார்.

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுவிட்டதாகவும், ஆயுதக் கலாசாரம் பரவிவிட்டதாகவும், இதற்கு விடுதலைப் புலிகளே காரணம் எனவும் குற்றம் சாட்டிய ஜெயலலிதா, ஆட்சியிலுள்ள தி. மு. க. அரசும் அதற்கு உடந்தையாக உள்ளது எனவும் முழங்கினார். அவருக்கு அன்று கூட்டணியாக விளங்கிய தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும் பெரிதும் துணைபுரிந்தார்.

இறுதியில் தி. மு. க. எவ்வளவோ பணிந்து போயும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொண்டபோதும் ஆட்சி கலைக்கப்பட்டது. ஜெயலலிதா வெற்றி பெற்றார். இதைத் தொடர்ந்து அடுத்த தேர்தலில் ஜெயலலிதா ஆட்சியைக் கைப்பற்றினார். தமிழகத்தில் புலிகளை ஒழித்துக்கட்டுவேன் என சூளுரைத்துச் செயற்பட்டும் வந்தார்.

ஆனால், அ. தி. மு. க. - காங்கிரஸ் தேநிலவு முடிவடைந்ததைத் தொடர்ந்து, வழமை போலவே மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் நிலைமை உருவாகியது. விடுதலைப்புலிகளுக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையில் நல்லுறவு நிலவுவதாகவும், புலிகளுக்கு பல வழிகளில் ஜெயலலிதா உதவுவதாகவும் காங்கிரஸ் கட்சியினர் குற்றம் சாட்டத்தொடங்கினர்.

தமிழ்நாட்டின் பல்வேறு சிறைகளில் இருந்து "விடுதலைப்புலிகள்" தப்பியிருப்பதாக கவலை வெளியிட்டுள்ள மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான், தப்பியோடியவர்களில் சிலர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் அரசதரப்பு சாட்சியங்கள் ஆவர் என்றும், தமிழக அரசிற்கு மத்திய அரசு புலிகள் தொடர்பான அறிவுறுத்தல்கள்

# மா.சபைகள் நடவடிக்கை; தலையிடக் கூடாது

## ஜனாதிபதி விஜயதுங்க பணிப்பு

(கொழும்பு)

மாகாணசபை செயற்பாடுகளில் மத்திய அமைச்சர்கள் தலையிடக்கூடாது என ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க உத்தரவிட்டுள்ளார். மாகாணசபைக்குரிய அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மாகாணசபை செயற்பாடுகளிலோ, கடமைகளிலோ மத்திய அரசின் அமைச்சர்களோ அதிகாரிகளோ தலையீடு செய்து அவற்றின் பணிகளுக்கு இடையூறாக இருக்கக் கூடாது என்றும் ஜனாதிபதி கண்டிப்பாக வலியுறுத்தியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பதவி விலகமாட்டேன் என்கிறார் ரணசிங்க

(கொழும்பு)

நான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்யமாட்டேன். எந்த இராஜதந்திரப் பதவியையும் ஏற்க மாட்டேன் என தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா தெரிவித்துள்ளார்.

நான் இந்நாட்டை விட்டும் செல்லமாட்டேன் என்றும் அவர் கூறினார். எவர் அதிகாரத்தில் இருந்தாலும் நான் அவருக்கு விசுவாசமாக இருப்பேன். பல பிரதமர்கள், ஜனாதிபதிகளின் கீழ் கடமையாற்றியுள்ள பிரட்மன் வீரக்கோன்போல் நான் இருக்கிறேன் என அமைச்சர் ரணசிங்க கூறினார்.

## அலுவலகம்

மனித உரிமைகள் குழுவின் அலுவலகமொன்று அண்மையில் கல்முனையில் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை மனித உரிமைகள் செயற்குழுவின் தலைவரான ஜே. எப். சூசா தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் ஸ்ரெப்கானி அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

மேலும் இவ் அலுவலகம் கல்முனை வைத்தியசாலை வீதியில் அமைக்கப்பட்டுள்ளது.

## 5 சி. ஐ. டி. குழுக்களிடம் பிரேமா கொலை விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொலை விசாரணை 5 சி. ஐ. டி. குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன இரகசியப் பொலிஸார் 5 குழுவாக பிரிக்கப்பட்டு அவற்றிடம் விசாரணை ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இந்த குழுக்களுக்கு பொறுப்பாக இரகசியப் பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் நாயகம் புஞ்சி பண்டா செனிவிரட்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

## தினசரி சிங்கப்பூர் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள்

(கொழும்பு)

தினசரி காலையில் சிங்கப்பூர் சென்று மாலையில் வீடு திரும்பும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை இரகசியப் பொலிசார் கைது செய்துள்ளனர். இவர் தினமும் கடமைக்கு வந்து கையொப்பம் இட்டு பின் விமானத்தில் ஏறி சிங்கப்பூர் செல்வார் மாலையில் கொழும்பு திரும்பி கையொப்பம் இட்டுவிட்டு வீடு திரும்புவார்.

தொடர்ந்து பலகாலமாக இவ்வாறு இவர் நடந்து கொண்டதை இரகசியப் பொலிசார் கண்டறிந்தனர். இந்தப் பொலிஸ்காரரர் பெறுமதியான துணிமணிகள், ஆடம்பர மது பானங்கள் போன்றவற்றை விற்று பெரும்பணம் சம்பாதித்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த மோசடிப் பிரயாணம் குறித்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரும், சுங்க அதிகாரி ஒருவரும் பாராமுகமாக இருந்துள்ளனர். அதற்காக இவர்களுக்கு மேற்படி பொலிஸ்காரரர் லஞ்சமும் கொடுத்து வந்துள்ளார். இவர்களும் தற்போது விசாரணைக்குள்ளாகியுள்ளனர்.

## தமிழக காவல்துறை

# நடவடிக்கை எடுத்திருந்தால் சார்ள்ஸ் தப்பியிருக்க முடியாது

### - தமிழக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(சென்னை)

தமிழக காவல்துறை உடனடி நடவடிக்கை எடுத்திருந்தால் ராஜீவ் கொலை வழக்கில் முக்கிய சாட்சியான சார்ள்ஸ் நவாஸ் தப்பிச்சென்றதை தடுத்திருக்க முடியும் என தமிழகஎதிர்க்கட்சித்தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரை காவலில் வைத்திருக்க சைதாப்பேட்டை சிறைச்சாலை பாதுகாப்பு போதுமானதாக இல்லை என எச்சரித்து மத்திய புலனாய்வுத்துறை தமிழக காவல்துறைக்கு கடிதம் எழுதியிருந்தது என்றும் இது குறித்து தமிழக காவல்துறை நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. இதனால் முக்கிய சாட்சியான சார்ள்ஸ் நவாஸ் தப்பிச் சென்றுவிட்டான் என்றும் பாலசுப்பிரமணியம் கூறினார்.

அந்த முகாமில் காவலில் உள்ள தமிழக சிறப்பு காவல் படையினரை மாற்றவேண்டும் என மத்திய புலனாய்வுத்துறை தனது, கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது. இந்த படையின் இன்ஸ்பெக்டர் இதற்கு பதில் எழுதிய கடிதத்தில் காவல் அணியை மாற்றுவது தனது பொறுப்பல்ல எனக்கூறி மத்திய புலனாய்வுத்துறை இதுபற்றி காவல்துறை தலைவருடன் தொடர்பு கொள்ளும்படி குறிப்பிட்டிருந்தார்.

## தமிழக சிறையிலிருந்து டெலோ உறுப்பினர் தப்பினார்

திருச்செந்தூர் சிறையிலிருந்து டெலோ குழுவின் உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினமிரவு தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இச்சிறையில் உள்ள சிறப்பு அகதி முகாமில் தமிழ் தீவிரவாதிகளும் அவர்களது ஆதரவாளர்களும் உள்ளனர்.

டெலோவைச்சேர்ந்த விஜயகுமார் என்பவர் நள்ளிரவு 2 மணிக்கு சிறையில் இருந்து தப்பினார். தங்களை பொது முகாமிற்கு மாற்றுமாறுகோரி 11 அகதிகள் நேற்றுமுன்தினம் உண்ணாவிரதம் இருந்ததாகவும் இதில்மூவர் அதிகாரிகள் தலையிட்டதில் உண்ணாவிரதத்தை விலக்கிக் கொண்டனர். இந்தவேளையில் விஜயகுமார் சிறையிலிருந்து தப்பியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சாட்சி தப்பிச் செல்ல மாநில அரசே காரணம்

மத்திய அமைச்சர் குற்றச்சாட்டு

## புலிகளின் நடமாட்டம் தமிழகத்தில் அதிகரிப்பு

### –வாழப்பாடி வலியுறுத்து

தமிழ்நாட்டில் கடந்த ஆறு மாதங்களுக்கு அதிகமாக விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இருந்து வருவதாக தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி வலியுறுத்திக் கூறினார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில்; சேலம், வேலூர் சிறைகளிலிருந்து விடுதலைப் புலிகள் தப்பிச் சென்றதும், மாமண்டூர் சம்பவம் மற்றும் சைதாப்பேட்டை சிறையிலிருந்து சார்ள்ஸ் தப்பிய விதம் என்பனவும் இதை எடுத்துக் காட்டுவதாகத் தெரிவித்தார்.

## தேர்தல் முடிவுகள் காங்கிரசிற்கு எதிரானதல்ல

(டில்லி)

நாட்டின் இடைத்தேர்தல் முடிவுகள் இந்திரா காங்கிரஸிற்கு எதிரான போக்கை காட்டவில்லை என அக்கட்சி கூறியுள்ளது.

பெரும்பாலும் உள்ளூர் காரணங்களின் அடிப்படையிலேயே தேர்தல் முடிவுகள் அமைந்ததாக காங்கிரஸ்கட்சி கூறியுள்ளது. இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் பல இடங்களில் தோல்வி கண்டுள்ளது தெரிந்ததே.

### இரு தினங்களில் மற்றுமொரு

## காஷ்மீர் போராளி தலைவர் இந்தியப்படையால் கைது

[டில்லி]

காஷ்மீர் பகுதியின் அல் ஜிகாத் அமைப்பின் தலைமைத் தளபதி பிலார்அகமத் கோகுலோர் வாரமுல்லா பகுதியில் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்றும் இவ்வமைப்பின் மூத்த தலைவர் ஒருவரும்இந்தியப்படைகளால் கைதுசெய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## சீனா, வடகொரியா குறித்து

பெற்றார். இதைத் தொடர்ந்து அடுத்த தேர்தலில் ஜெயலலிதா ஆட்சியைக் கைப்பற்றினார். தமிழகத்தில் புலிகளை ஒழித்துக்கட்டுவேன் என சூளுரைத்துச் செயற்பட்டும் வந்தார்.

ஆனால், அ. தி. மு. க. - காங்கிரஸ் தேநிலவு முடிவடைந்ததைத் தொடர்ந்து, வழமை போலவே மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் நிலைமை உருவாகியது. விடுதலைப்புலிகளுக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையில் நல்லுறவு நிலவுவதாகவும், புலிகளுக்கு பல வழிகளில் ஜெயலலிதா உதவுவதாகவும் காங்கிரஸ் கட்சியினர் குற்றம் சாட்டத்தொடங்கினர்.

தமிழ்நாட்டின் பல்வேறு சிறைகளில் இருந்து ''விடுதலைப்புலிகள்'' தப்பியிருப்பதாக கவலை வெளியிட்டுள்ள மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான், தப்பியோடியவர்களில் சிலர்ராஜீவ் காந்தி கொலை வழக்கில் அரசதரப்பு சாட்சியங்கள் ஆவர் என்றும், தமிழக அரசிற்கு மத்திய அரசு புலிகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கியிருக்கின்றபோதும் தமிழக முதல்வர் அதில் உறுதியற்று இருக்கின்றார் என்றார்.

இதேவேளை தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி அ. தி. மு. க. அரசாங்கத்தைப் பதவி நீக்கப்போதுமான காரணங்கள் உண்டென்றும், கடந்த காலத்தில் தி. மு. க. ஆட்சியின் போது விடுதலைப்புலிகளுக்கும் தி. மு. க அரசாங்கத்திற்கும் இருந்த உறவுபோன்று தற்பொழுது அ தி. மு. கவிற்கும் புலிகளுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாகச் சாடியுள்ளார்.

அதாவது இரண்டு வருடங்களுக்கு முன் தி. மு, க. அரசாங்கத்தை ஜெயலலிதா ஆட்டம்காண வைத்தது போன்று, இன்று ஜெயலலிதா அரசாங்கத்தை காங்கிரஸ் உலுப்புகின்றது. தமிழக அரசைக் கலைப்பதற்கு காங்கிரசிற்கு இதுபோதுமானதாகும். ஏனெனில் மாநிலங்களின் ஆட்சிக்கவிழ்ப்பிற்குஒருவலுவானகாரணம் எதுவும் இந்தியாவைப் பொறுத்து அதுவும் காங்கிரஸ்கட்சியின் ஆட்சியில் தேவையாக இருப்பதில்லை.

ஆனால் இன்று தமிழக ஆட்சியைக் கலைப்பதில் மத்திய அரசிற்கு அதாவது காங்கிரஸ் கட்சிக்கு லாபம் என்ன என்பதே கேள்வியாகும். தற்பொழுதுதமிழகத்தில் காங்கிரஸ் கட்சி ஆளும்கட்சியாகஇல்லாவிட்டாலும் பலமான எதிர்க்கட்சிஆகும் இந்நிலையானது ஆட்சிக் கவிழ்ப்பின் பின் ஏற்படும் தேர்தலில் கிடைக்குமா என்பதே முக்கிய கேள்வியாகும்.

காங்கிரஸ் கடந்த தேர்தலில் பலமான எதிர்க்கட்சியாக வருவதற்கு அ. தி. மு. க. கூட்டே உதவியது. தற்பொழுது ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெற்றால் தி. மு. க. ஆட்சியைப் பிடிக்கும் என கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன. இந்நிலையில் பெரும்பாலும் காங்கிஸிரற்கு மூன்றாம் இடமேகிடைக்கும். இதன் காரணமாகத்தான் இன்று ஜெயலலிதா அரசைக் கலைப்பதற்கு மத்தியிலுள்ள காங்கிரஸ்அரசு யோசனை செய்கிறதே ஒழிய, பெரும்பான்மை ஆதரவு பெற்ற அரசாங்கம் ஒன்றைக் கலைப்பதைப்பற்றி யோசனை செய்யவில்லை. இதை உணராது காங்கிரஸ் கட்சி அ. தி.மு.க.அரசைக் கலைக்கப் போதிய காரணம்இல்லாமல் பார்த்துக் கொண்டிருப்பதாக யாராவது கருதுவார்களேயானால் அவர்கள் காங்கிரஸ்கட்சியின் வரலாற்றை புரிந்து கொள்ளாதவர்கள் என்றே கூறலாம்.

---

இல் முக்கிய சாட்சியான சார்ள்ஸ் நவாஸ் தப்பிச்சென்றதை தடுத்திருக்க முடியும் வில் வைத்திருக்க சைதாப்பேட்டை சிறைச்சாலை பாதுகாப்பு போதுமானதாக

# தமிழக சிறையிலிருந்து டெலோ உறுப்பினர் தப்பினார்

திருச்செந்தூர் சிறையிலிருந்து டெலோ குழுவின் உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினமிரவு தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இச்சிறையில் உள்ள சிறப்பு அகதி முகாமில் தமிழ் தீவிரவாதிகளும் அவர்களது ஆதரவாளர்களும் உள்ளனர்.

டெலோவைச்சேர்ந்த விஜயகுமார் என்பவர் நள்ளிரவு 2 மணிக்கு சிறையில் இருந்து தப்பினார். தங்களை பொது முகாமிற்கு மாற்றுமாறுகோரி 11 அகதிகள் நேற்றுமுன்தினம் உண்ணாவிரதம் இருந்ததாகவும் இதில்மூவர் அதிகாரிகள் தலையிட்டதில் உண்ணாவிரதத்தை விலக்கிக் கொண்டனர். இந்தவேளையில் விஜயகுமார் சிறையிலிருந்து தப்பியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சாட்சி தப்பிச் செல்ல மாநில அரசே காரணம்

### மத்திய அமைச்சர் குற்றச்சாட்டு

சமீபகாலமாக தமிழக சிறைகளில் இருந்து எல். ரீ. ரீ. ஈ. உறுப்பினர் பலர் தப்பிச் சென்றமைக்கு மாநில அரசின் மெத்தனப் போக்கே காரணம் என மத்திய இணை அமைச்சர் எம். அருணாசலம் தெரிவித்துள்ளார். ராஜீவ் கொலை வழக்கில் முக்கிய சாட்சியான சார்ள்ஸ் நவாஸ் தப்பிச் சென்றதற்கு தமிழக அரசு தனது பொறுப்பை தட்டிக்கழிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

குறித்து தமிழக காவல்துறை நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. இதனால் முக்கிய சாட்சியான சார்ள்ஸ் நவாஸ் தப்பிச் சென்றுவிட்டான் என்றும் பாலசுப்பிரமணியம் கூறினார்.

அந்த முகாமில் காவலில் உள்ள தமிழக சிறப்பு காவல் படையினரை மாற்றவேண்டும் என மத்திய புலனாய்வுத் துறை தனது, கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது. இந்த படையின் இன்ஸ்பெக்டர் இதற்கு பதில் எழுதிய கடிதத்தில் காவல் அணியை மாற்றுவது தனது பொறுப்பல்ல எனக்கூறி மத்திய புலனாய்வுத்துறை இதுபற்றி காவல் துறை தலைவருடன் தொடர்பு கொள்ளும்படி குறிப்பிட்டிருந்தார்.

மத்திய புலனாய்வு நிறுவனத்திற்கும் தமிழக காவல் துறைக்கும் இடையே நடந்த கடித போக்குவரத்தை மாநில அரசு வெளியிட வேண்டும் என்றும் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இந்தியாவிற்கு உதவுமாறு இஸ்ரேலிடம் கோரிக்கை

(டில்லி)

இந்திய அரசாங்கம் பயங்கரவாதிகளுக்கு எதிராக நடத்தும் போரிற்கு இஸ்ரேல் உதவியளிக்க வேண்டும் என பிரதமர் நரசிம்மராவ் இஸ்ரேலை கேட்டுள்ளார்.

இந்தியாவுக்கு இரண்டுநாள் விஜயம்ஒன்றை மேற்கொண்டு கடந்தவாரம் புதுடில்லி வந்த இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் ஷிமொன் பெரஸிடம் நரசிம்மராவ் இக்கோரிக்கையை விடுத்தார் இதை ஏற்றுக்கொள்வதாக ஷிமொன் பதிலளித்தார்.

இந்தியாவிற்கு எவ்வகையில் இஸ்ரேல் உதவும் என இஸ்ரேலிய அமைச்சரை நிருபர்கள் கேட்டபோது, பரஸ்பரம் ஒரு நாட்டின் அனுபவத்தை மற்றநாடு படிக்கமுடியும் அபாயம் ஏற்படமுன் அதை எதிர்கொள்ள முயலக்கூடும் என அவர் பதிலளித்தார்

இந்தியாவின் அரபு ஆதரவு நிலைகுறித்துபெரஸ் அவதானத்துடன்இருந்ததாகவும்இஸ்ரேலியநவீன இராணுவ தொழில்நுட்ப சட்டத்தை இந்தியாவுடன் பகிர அவர் மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புதுடில்லி கோரியுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து ஒப்பந்தம் செய்ய முன்பு இந்தியாவும் இஸ்ரேலும் பரஸ்பர நம்பிக்கையைவளர்க்க மேலும் அவகாசம் தேவைப்படும் என இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஈரான், ஈராக் ஆகிய நாடுகளுடன் இந்தியாவிற்குள்ள பாதுகாப்பு இணைப்பே இந்திய-இஸ்ரேல் பாதுகாப்பு ஒத்துழைப்பிற்கு தடையாக உள்ளது என இஸ்ரேலிய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்தியா ஈரானுக்கும், ஈராக்கிற்கும் தனது இராணுவ ஆலோசகர்களை அனுப்பி வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# கம்போடியாவில் தேர்தல்கள் ஆரம்பம்

(நொம்பென்)

கம்போடியாவில் 20 வருடங்களின் பின் பொதுத்தேர்தல்கள் முதற் தடவையாக நேற்று ஆரம்பித்தன. தேர்தல்கள் 6 தினங்களுக்கு நடைபெறும். ஐ நா. மேற்பார்வையில் நடக்கும் இத்தேர்தலை கமறூச் கெரில்லாக்கள் புறக்கணிதுள்ளனர். இவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள 10 சத வீதமான பகுதியில் தேர்தல்கள் நடைபெறவில்லை.

ஆயுதம் தாங்கிய ஐ. நா. அமைதிப்படையினர் கமறூச் கெரில்லாக்கள் தாக்கலாம் என எதிர்பார்க்கப்படும் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளனர். 80 சத வீதமான வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்கலாம் என ஐ நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேசமயம் தாய்லாந்து கம்போடியாவுடனான தனது எல்லையில் தனது படைகளை முன்னெச்சரிக்கையாக நிறுத்தியுள்ளது.

ஐ. நாவின் கோரிக்கைக்கு அமைய தேர்தல் காலத்தின் போது மோதல்கள் ஏதும் வெடித்தால் காயமடைந்தவர்களை ஏற்றிச் செல்ல தாய்லாந்து விமானப்படை உலங்குவானூர்திகள், வாகனங்கள் எல்லைப்பகுதிகள் நோக்கி நகர்ந்துள்ளன.

இதேவேளை கமறூச் கெரில்லாக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ள தாய்லாந்து, தேர்தலின் போது மறூச் கெரில்லாக்கள் தாக்குதல் நடத்தும் சாத்தியம் இல்லை எனக் கூறியுள்ளது. தேர்தல் முடிவுகளின் பின்பே நிலைமையை அவதானித்து தாக்குதல் நடைபெறுவது குறித்து கூறமுடியும் என தாய்லாந்து அதிகாரிகள் கூறினர்.

---

(டில்லி)

நாட்டின் இடைத்தேர்தல் முடிவுகள் இந்திரா காங்கிரஸிற்கு எதிரான போக்கை காட்டவில்லை என அக்கட்சி கூறியுள்ளது.

பெரும்பாலும் உள்ளூர் காரணங்களின் அடிப்படையிலேயே தேர்தல் முடிவுகள் அமைந்ததாக காங்கிரஸ்கட்சி கூறியுள்ளது. இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் பல இடங்களில் தோல்வி கண்டுள்ளது தெரிந்ததே.

## இரு தினங்களில் மற்றுமொரு

# காஷ்மீர் போராளி தலைவர் இந்தியப்படையால் கைது

[டில்லி]

காஷ்மீர் பகுதியின் அல் ஜிகாத் அமைப்பின் தலைமைத் தளபதி பிலார்அகமத் கோகுலோர் வாரமுல்லா பகுதியில் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்றும் இவ்வமைப்பின் மூத்த தலைவர் ஒருவரும்இந்தியப்படைகளால் கைதுசெய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# சீனா, வடகொரியா குறித்து ஆசியான் நாடுகள் அச்சம்

[சிங்கப்பூர்]

தென்கிழக்காசிய நாடுகளும் அவற்றின் நெருங்கிய நாடுகளும் அமெரிக்க வாபஸை அடுத்து பலம்பெற்றுவரும் சீனா, வடகொரிய அணுஆயுதம் சம்பந்தமாக அச்சம் கொண்டுள்ளன. இது குறித்து ஆசியான் நாடுகளும் அதன் 7 பிரதான வர்த்தக நாடுகளும் கடந்த வியாழனன்று மாநாடு ஒன்றை நடத்தின.

சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, பிலிப்பைன்ஸ், புரூணி ஆகிய நாடுகள் ஆசியான் அமைப்பில் உள்ளன. இதுவரை அமெரிக்கப் படைகள் இப்பகுதியில் இருந்ததால் இந்நாடுகள் தமது பொருளாதார அபிவிருத்தியை பெருக்கும் வாய்ப்பை பெற்றிருந்தன. சோவியத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்துபிலிப்பைன்சில் இருந்து அமெரிக்கத் துருப்புக்கள் வாபஸ் பெற்றிருப்பதால் ஆசியான் நாடுகளுக்கு பாதுகாப்புப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

சீனாவின் நவீனமயத்தினால் அந்நாட்டின் இராணுவ பலம் அதிகரிக்குமாதலால் உலகில் புதிய பாதுகாப்பு அமைப்பு தேவைப்படுமென சிங்கப்பூர் அமைச்சர் லீகுவான்யூ கூறினார்.

# அணு ஆயுத பரவல் தடுப்பு இந்தியா- அமெ. பேச்சு

இந்தியாவும் அமெரிக்காவும் அணுவாயுத பரவல் தடுப்பு தொடர்பான மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தையை ஜூலைமாதம் நடாத்த உள்ளதாக இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க பிரதி உதவி இராஜாங்க அமைச்சர் ஜோன் மாலொட்ருக்கும் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்சிற்றுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின் போதே மேலும் கூடுதலான பேச்சுக்கள் நடாத்துவது தொடர்பாக இணக்கம் காணப்பட்டதென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

மாலொட்ருக்கும் டிக்சிற்றுக்கும் இடையிலான இச்சந்திப்பே கிளிங்டனின் நிர்வாகத்திற்கும் இந்தியாவுக்கும் இடையேயான முதலாவது உயர்மட்ட சந்திப்பாகும். இச்சந்திப்பு மிகவும் சிநேக பூர்வமான முறையில் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

# தெ.ஆபிரிக்க கறுப்பின குழுக்கள் மோதல்

### 13பேர் பலி, 60பேர் காயம்

(ஜொகனர்ஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவில் சூலு இனத்தவர்க்கும், நெல்சன் மண்டேலாவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற வகுப்பு மோதலில் 13பேர் பலியாகினர். 60பேர் காயமடைந்தனர். மோதலில் ஈடுபடுபவர்கள் அமைதிகாக்குமாறு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் மண்டேலா கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வன்முறை சம்பவத்தினால் தாம் ஆச்சரியப்படவில்லை. தென்னாபிரிக்காவில் ஜனநாயக அரசு அதிகாரத்திற்கு வரும் வரையில் இது போன்றவன்செயல்கள் தொடரும் என நெல்சன் மண்டேலா இவ் வன்முறை குறித்து கருத்து தெரிவிக்கையில்கூறினார்.

ஈழநாதம்

# தென்பகுதி தடுப்பு முகாமில் கைதிகள் மீது சித்திரவதை

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ தடுப்பு முகாம்களிலும் சிறைக் கூடங்களிலும் குற்றப்பத்திரிகைகள் எதுவும் தாக்கல் செய்யப்படாது பல இளைஞர்கள் கைகால்கள் கட்டப்பட்ட நிலையில்பெரும்சித்திரவதைக்குட்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் தமது நிலைபற்றி எந்த ஒரு அரசியல் கட்சிகளும் அக்கறை செலுத்தாதது குறித்து தாம் மிகுந்த வேதனையும் கவலையும் அடைந்துள்ளதாக சந்தேசிய வானொலிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அரசியல்கைதிகளாக இது வரை எதுவித விசாரணைகளோ, குற்றப்பத்திரிகைகளோ இல்லாமல் தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் பலவித சித்திரவதைகளுக்கும் ஆளாகி வருவதாகவும் இதனால் பலர் சித்தசுவாதீன மற்ற நிலையில் இருப்பதுடன் பலரது கைகால்கள் விலங்கிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அவர்கள் எழுதிய கடிதத்தில் பலர் முகாமில் இருந்து சித்திரவதை தாங்க முடியாமல் தப்பியோடியதைத் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனையவர்களுக்கு பாரிய பிரச்சினைகள் உருவாகியுள்ளதுஎன்றும், இதனால் பல கெடுபிடிகளை தாங்கள் அனுபவிக்க வேண்டி இருப்பதாகவும், அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் காலத்தைப்போக்குவதாகவும் தெரிவித்துள்ளனர்

பலவத்தை முகாமில் 1991 ஆம் ஆண்டு தப்பியோடிய ஐந்து பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுகத்தியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இதேபோல் 1992ஆம் ஆண்டு தப்பியோடியவர்களில் ஒருவர் பாதுகாப்பு படையினரால் உயிருடன் பிடிக்கப்பட்டு மூர்க்கத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டு சுட்டுபடுகொலை செய்தபின் அவரது உடலை தடுப்பு முகாமுக்கு அருகே போட்டிருந்தனர்

அத்துடன் அண்மையில் கிணற்றில் குளிக்க சென்றபோது தப்பிபோட முயற்சித்த பெண் கைதி ஒருவரின் கால்களில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் காலில் காயங்கள் ஏற்பட்ட நிலையில் எதுவித சிகிச்சையும் அளிக்கப்படாது அப்பெண்மணி ஐந்து நாட்களாக அடைத்து வைக்கப்பட்டார்

## கலை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு கலை நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளது.

தீவக கோட்ட மாணவர் அமைப்பினரின் இக்கலைநிகழ்ச்சிகள் நாளை மாலை 6.30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

★

கொக்குவில் நாமகள் கல்வி வளர்ச்சிக் கழக கலை விழா இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் உரை நிகழ்த்தவுள்ளனர். இதனையடுத்து கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இதில் நாமகள் கல்வி வளர்ச்சிக்கழக மாணவர்களின் நடன நிகழ்வுகள் மற்றும் கவியரங்கம், பட்டிமண்டபம் ஆகியனவும் கழக மாணவர்களின் 'உணர்வுகள்'' எனும் நாடகமும் நடைபெறவுள்ளது.

# தமிழகத்தில் புலிகளின் நடமாட்டம் தெரிகிறதாம் - கருணாநிதி

(சென்னை)

தமிழகத்தில் தற்போதுள்ள நிலைமையை பார்க்கும்போது விடுதலைப் புலிகள் நடமாட்டம் இருப்பது தெரிகின்றது என தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நேற்று திருச்சியில் செய்தியாளரிடம் பேசிய அவர், மாநிலத்தில் புலிகளின் நடவடிக்கை இருப்பதாலேயே அவர்கள் சிறையிலிருந்து தப்பமுடிகிறது என்றும், இதுவரை 65 பேர் இவ்வாறு சிறையிலிருந்துதப்பியதாகவும் நேற்றுமுன்தினம் முதலமைச்சர் வெளியிட்ட அறிக்கையில் இருந்து அறிந்துகொண்டதாகவும் மு. கருணாநிதி தெரிவித்தார்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்ததின் தொடர்ச்சியே அண்மையில் அமைச்சரவை விரிவாக்கத்திற்கு காரணம் என்றும் மு கருணாநிதி மேலும் தெரிவித்தார்.

## புலிகள் போராளி தப்பியது அமைச்சருக்கு கவலையாம்

(சென்னை)

தமிழ்நாட்டில் பொலிஸ் காவலில் இருந்து புலிப் போராளி என சந்தேகிக்கப்படும் ஒருவர் சமீபத்தில் தப்பிச் சென்றுவிட்டது பற்றி சிறு தொழில்கள் மற்றும் கிராமத் தொழில்கள் இணை அமைச்சர் எம். அருணாசலம் கவலை தெரிவித்திருக்கிறார்.

நாகர்கோயிலில் நேற்று செய்தியாளரிடம் பேசிய அவர், இச்சம்பவத்துக்கான பொறுப்பை மாநில அரசு தட்டிக்கழிக்க முடியாது என்றார்.

தமிழ்நாட்டுச் சிறைச்சாலையில் இத்தகைய சம்பவங்கள் இப்போது அடிக்கடி ஏற்படுவதாகவும் அவர் கூறினார்.

## இளம் பெண்ணை விடுவிக்க நீதி மன்றம் பணிப்பு

(கொழும்பு)

சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது இராணுவத்தினரால் கைதாகி வெலிக்கடை சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் மகளின் விடுதலை கோரி தாய் தொடர்ந்த வழக்கின் மனுவில்கோரப்பட்டவரை அடுத்த மாதம் 3ஆம் திகதி மன்றில் ஆஜர் செய்து விடுதலை செய்ய மேன்முறையீட்டு நீதி மன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த தனரோஸ் புளோசம் தேவநாயகத்தின் விடுதலைக்காக அவரின் தாயார் இலங்கை சட்டதரணிகள் சங்கத்தின் சட்ட உதவி நிலையத்தை நாடியிருந்தார்.

அவரின் மனுவில் மகளை வெலிகடை சிறையில் பார்த்தேன். அவர் மனக்குழப்பத்திலிருந்தார் கேள்விக்கு சரியான பதில் இல்லை. மனோவைத்திய பரிசோதனைக்கு உத்தரவிடவேண்டும் எனக்குறிப்பிடப்பட்டிருந்தது.

வழக்கின்போது மனுவில் கோரப்பட்டவரை விடுதலை செய்வதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என அரச சட்டத்தரணி கூறினார்.

## 40 குடிசைகள் அமைப்பு

(தொல்புரம்)

இராணுவநடவடிக்கை காரணமாகத் தீவகப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு யாழ். சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் 40 குடிசைகள் அமைக்கப்படவுள்ளன

## இளைஞரின் சடலத்தை இனங்காண உதவுக

(கொழும்பு)

சுடந்தமுகலாம் திகதி ஆமர் வீதிச் சந்தியில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது கொல்லப்பட்ட ஓர் இளைஞனின் சடலத்தை இனம் காண உதவுமாறு சிறிலங்கா பொலிசார் கேட்டுள்ளனர்.

இந்த இளைஞர் நீலக்காற்சட்டையும் வெள்ளைச் சேட்டும் அணிந்திருந்தார் என சிறிலங்கா பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

## ம. மாகாண முதலமைச்சராக திஸ்ஸநாயக்கா

(கொழும்பு)

மத்தியமாகாண முதலமைச்சராக டபிள்யூ. பி. பி. திஸ்ஸநாயக்க பதவி ஏற்றுள்ளார்.

மாகாண ஆளுநர் பி. சி. இம்புலான முன்னிலையில் பதவி பிரமாணம் செய்துகொண்டார். தமது அமைச்சரவையை அவர் அடுத்த வாரம் அறிவிப்பார். திஸ்ஸநாயக்கா ஐ. தே. கவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடவுச் சீட்டுகளுக்கு கறுப்புவெள்ளை புகைப்படம்

(கொழும்பு)

புதிய கடவுச்சீட்டை (பாஸ்போட்) பெறுவதற்கு கறுப்பு-வெள்ளைப் புகைப்படங்கள் அனுப்பப்படவேண்டும் என குடிவரவு, குடியகல்வுதிணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மைக்காலத்தில் கலர் புகைப்படங்கள் கடவுச் சீட்டிற்குப் பயன்படுத்தப்பட்டதெனவும், இதில் பலகுழறுபடிகள் நடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து மீண்டும் கறுப்பு-வெள்ளை படங்கள் பயன்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

இவ்வருடம் ஜனவரிமாதம் முதல் ஏப்பிரல் மாதம்வரையான காலப்பகுதியில் சுமார் ஒரு லட்சத்து 35 ஆயிரம் கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டதாகவும் இதில் 30 ஆயிரம் கடவுச்சீட்டுகள் சகல நாடுகளுக்கும்செல்ல பயன்படுத்தக் கூடியவை என்றும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## லலித்திற்கு 1 லட்சம் வாக்குகள்

(கொழும்பு)

மாகாணசபை தேர்தல்களில் வேட்பாளர்களுக்கு அளிக்கப்பட்ட விருப்பு வாக்குகளில் படுகொலை செய்யப்பட்ட லலித்அத்துலத்முதலிக்கு 1,25 300 வாக்குகளும், காமினிதிஸ்ஸாநாயக்காவிற்கு 69.574 வாக்குகளும் கிடைத்துள்ளன.

## மெய்வல்லுனர் போட்டி

இன்று 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் தலைமையில் யாழ். கோட்ட மெய்வல்லுனர்போட்டி நடைபெறும். சகல பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முதலிரு இடங்களைப் பெற்றவர்கள் தவறாது வருகை தந்து போட்டியிற் பங்கு கொண்டு ஒத்துழைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

## யாழ்ப்பாணத்தில் பதிவாளர் அலுவலகம்

(கொழும்பு)

வடபிராந்திய பதிவாளர் நாயகம் பணிமனை யாழ்ப்பாணத்தில் அமைய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பணிமனை விரைவில் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கான பதிவு வேலை இனி யாழ்ப்பாணத்திலேயே மேற்கொள்ளப்படும்.

## புதிய தேசியக் கொடியை

## மரண அறிவித்தல்கள்

### பாக்கியநாதன் அந்தோனிப்பிள்ளை

[இராசேந்திரம்]

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் சுருவில் கன்னியம்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட இராசேந்திரம் (சவிரிமுத்து) காலமானார். இவர் காலம் சென்ற பாக்கியநாதன் அன்னம்மா தம்பதிகளின் மகனும், ஆனந்தராஜா, குமுதா, பாக்கியராசா, யோகராசா ஆகியோரின் தந்தையும், யோசப் (பண்டிவிரிச்சான்), செல்வம், சவிரிமுத்து (சாம்பல்தீவு), விமலா, லலிதா, கிறிஸ்ரோசன், நீக்கிலாஸ், திரேசம்மா ஆகியோரின் சகோதரரும், விக்டோரியா, சரசு, நீக்கிலாஸ், தேவதாஸ், மேரி, அஞ்சலா (மல்லிகா), பிலிப்பு ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரது பூதவுடல் ஓமந்தையில் உள்ள மருதம் குளத்தில் 23-05-93 ஞாயிற்றுக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

68/18 அராலிறோட்,
செழியன் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

தகவல் :
தே. தமிழ்ச்செல்வன்

[4950]

### பாக்கியநாதன் அந்தோனிப்பிள்ளை

திரு. பாக்கியநாதன் அந்தோனிப்பிள்ளை (இராசேந்திரம்) 22-05-93 இல் ஓமந்தையில் அகால மரணமானார்.

சில்லாலையைப் பிறப்பிடமாகக்கொண்டவரும். சுரு

கோரி தாய் தொடர்ந்த வழக்கின் மனுவில்கோரப்பட்ட வரை அடுத்த மாதம் 3ஆம் திகதி மன்றில் ஆஜர் செய்து விடுதலை செய்ய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த தனரோஸ் புளோசம் தேவநாயகத்தின் விடுதலைக்காக அவரின் தாயார் இலங்கை

விருந்தார் கேள்விக்கு சரியான பதில் இல்லை. மனோவைத்திய பரிசோதனைக்கு உத்தரவிடவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

வழக்கின்போது மனுவில் கோரப்பட்டவரை விடுதலை செய்வதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என அரச சட்டத்தரணி கூறினார்.

## கறுப்பு-வெள்ளைப் புகைப்படம்

(கொழும்பு)

புதிய கடவுச்சீட்டை (பாஸ்போட்) பெறுவதற்கு கறுப்பு-வெள்ளைப் புகைப்படங்கள் அனுப்பப்படவேண்டும் என குடிவரவு, குடியகல்வுதிணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மைக்காலத்தில் கலர் புகைப்படங்கள் கடவுச் சீட்டிற்குப் பயன்படுத்தப்பட்டதெனவும், இதில் பலகுழறுபடிகள் நடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து மீண்டும் கறுப்பு-வெள்ளை படங்கள் பயன்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

இவ்வருடம் ஜனவரிமாதம் முதல் ஏப்பிரல் மாதம்வரையான காலப்பகுதியில் சுமார் ஒரு லட்சத்து 35 ஆயிரம் கடவுச் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டதாகவும் இதில் 30 ஆயிரம் கடவுச்சீட்டுகள் சகல நாடுகளுக்குஞ்செல்ல பயன்படுத்தக்கூடியவை என்றும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

காமினி திஸ்ஸாநாயக்காவிற்கு 69.574 வாக்குகளும் கிடைத்துள்ளன.

## மெய்வல்லுனர் போட்டி

இன்று 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் தலைமையில் யாழ். கோட்ட மெய்வல்லுனர்போட்டி நடைபெறும். சகல பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முதலிரு இடங்களைப் பெற்றவர்கள் தவறாது வருகைதந்து போட்டியிற் பங்கு கொண்டு ஒத்துழைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

சன், நீக்கிலாஸ், திரேசம்மா ஆகியோரின் சகோதரரும், விக்டோரியா, சரசு. நீக்கிலாஸ். தேவதாஸ். மேரி, அஞ்சலா (மல்லிகா), பிலிப்பு ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரது பூதவுடல் ஓமந்தையில் உள்ள மருதம் குளத்தில் 23-05-93 ஞாயிற்றுக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

68/18 அராலிறோட்,
செழியன் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

தகவல் :
தே. தமிழ்ச்செல்வன்

[4950]

## 40 குடிசைகள் அமைப்பு

(தொல்புரம்)

இராணுவநடவடிக்கை காரணமாகத் தீவகப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு யாழ். சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் 40 குடிசைகள் அமைக்கப்படவுள்ளன

இக்குடிசைகள் யாழ். புகையிரத நிலைய வளவில் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன தீவக மக்கள் தங்கியுள்ள இப்பகுதிகளில் உள்ள இடநெருக்கடியைத் தவிர்க்கும் முகமாகவே இக் குடிசைகள் கட்டப்படுகின்றன. (41)

## நவசமசமாஜகட்சி படுதோல்வி

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் தெற்கில், காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் நவசமசமாஜ கட்சியிலும் சுயேட்சைக் குழுக்களிலும் போட்டியிட்ட அனைத்துவேட்பாளர்களுமே படுதோல்வி அடைந்துள்ளனர்.

அவர்களுக்கு மேற்படி மாவட்டங்களில் ஒரு ஆசனம் கூட கிடைக்கவில்லை.

சென்ற முறை தென் மாகாண சபையை ஐந்து முஸ்லிம் உறுப்பினர்கள் மூன்று மாவட்டங்களில் இருந்தும் பிரதிநிதித்துவப் படுத்திக் கொண்டனர்.

## யாழ்ப்பாணத்தில் பதிவாளர் அலுவலகம்

(கொழும்பு)

வடபிராந்திய பதிவாளர் நாயகம் பணிமனை யாழ்ப்பாணத்தில் அமைய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பணிமனை விரைவில் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கான பதிவு வேலை இனி யாழ்ப்பாணத்திலேயே மேற்கொள்ளப்படும்.

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் இடமாற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றும் குணதிலக பாதுகாப்பு அமைச்சுக்கு இடமாற்றப்பட்டு வெளிநாட்டுப் பிரமுகர்கள் இலங்கைக்கு விஜயம்செய்யும்போது அளிக்கப்படும் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்படவிருக்கிறார்.

ஜனாதிபதி பாதுகாப்புப்பிரிவில் கடமையாற்றுபவர்கள் விரும்பிய இடங்களுக்கு இடமாற்றம் கோரும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய தேசியக் கொடியை எரித்திரியா ஏற்றியது

(லண்டன்)

எரித்திரியா நேற்று நள்ளிரவு தனது புதிய தேசியக் கொடியை ஏற்றியது. எத்தியோப்பியாவில் இருந்து விடுதலைபெற்ற எரித்திரியா ஆபிரிக்காவின் 52ஆவது நாடாக உதயமாகிறது. 30 வருடகாலமாக எத்தியோப்பியாவுக்கு எதிராக ஆயுதப்போர் நடத்திய எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்கிறார்.

## இலவச பாடப் புத்தகம் அச்சிடும் வேலை ஆரம்பம்

(கொழும்பு)

இலவச பாட நூல்களை அச்சிடும் வேலைகள் தற்போது ஆரம்பமாகி உள்ளதாக கல்வி சேவைகள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் அவ் வட்டாரங்கள் சுமார் 35 கோடி ரூபா இலவச பாடநூல்கள் அச்சிடுவதற்காக ஒதுக்கியுள்ளதாகவும் இவ் வருடம் ஒக்டோபர் மாதத்திற்குள் புத்தகங்கள் அச்சிட்டு முடிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்தன.

மத்திய மாகாணத்தில் தோல்விக்கு காரணம்

## தமிழர் அபிலாஷையை புரிந்து கொள்ளாமையே

(கொழும்பு)

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய விதத்தில் செயற்படாமையே மத்திய மாகாண சபையில் தமது கட்சி வெற்றிபெறாமைக்குக் காரணமென ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிச் செயற்திட்டத் தலைவர் காமினி திசாநாயக்கா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

கண்டி மாவட்டத்தில் 70 ஆயிரம் தமிழ் வாக்காளரும். மாத்தளை மாவட்டத்தில் 35 ஆயிரம் தமிழ் வாக்காளரும், நுவரெலியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் தமிழ் வாக்காளரும், பதுளை மாவட்டத்தில் 80 ஆயிரம் தமிழ் வாக்காளரும் உள்ளனர். எனவே தமிழ் மக்களின் வாக்கைத் திரட்டத் திறமையான வேறொரு அமைப்பு இருக்க வேண்டும். எதிர்காலத்தில் நாம் முகம்கொடுக்கவேண்டிய முக்கிய அரசியல் பிரச்சினையாக இது இருக்கப்போகிறது.

தமிழ்மக்களின் வாக்குகளை புதிய திசைக்கு மாற்றுவது எப்படி என்பது பற்றி ஆராயப்படும் என்றார்.

## பாக்கியநாதன் அந்தோனிப்பிள்ளை

திரு. பாக்கியநாதன் அந்தோனிப்பிள்ளை (இராசேந்திரம்) 22-05-93 இல் ஓமந்தையில் அகால மரணமானார்.

சில்லாலையைப் பிறப்பிடமாகக்கொண்டவரும். சுருவிலை வசிப்பிடமாகவும். தற்பொழுது நாவற்குழியில் வசித்தவருமான(புகையிலைவியாபாரி) திரு.பாக்கியநாதன் அந்தோனிப்பிள்ளை [இராசேந்திரம்] 22-05-93 இல் ஓமந்தையில் அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற சற்குணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாக்கியநாதன் அன்னம்மா தம்பதிகளின் புதல்வரும் ஆவார். இவர் ஆனந்தராஜா, காலஞ்சென்ற செல்வராசா, குமுதா, பாக்கியராசா, யோகராசா, இவர்களின் பாசமிகு தந்தையும். காலஞ்சென்ற யோசேவ் சவிரிமுத்து, விமலா, புஸ்பராணி, நீக்கிலாஸ், திரேசம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார் 23-05 93இல் இவரது நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன். இவரது துக்கம் நாவற்குழியில் இன்று (24-05-93) கொண்டாடப்படும்.

தகவல் :
(4949) மகன் : அ. ஆனந்தராசா
வே. குலசிங்கம்

## திருமதி செல்லையா மாசிலாமணி

[பூமலர்]

[ஆசிரியை அ. மி. த. க. பாடசாலை அளவெட்டி]

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லையா மாசிலாமணி 21-05-93 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையா [அதிபர் அ. தெ. அ. மி. த. க. பாடசாலை] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு, திருமதி கந்தையாவின் மருமகளும். வாகீசன் [பிரான்ஸ்], கௌதமி, கௌசல்யா [ஆசிரியை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி], கௌசிகா [மாணவி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி] ஆகியோரின் அன்புத்தாயாரும, சிதம்பரநாதன், பாக்கியநாதன், திருஞானசம்பந்தன் [ஜேர்மனி], புஸ்பமலர், புனிதமலர், இராசமலர், ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனபதி, பூமணி, புவனேஸ்வரி, மகாதேவன், இராசசிங்கம், தர்மலிங்கம், இலட்சுமி, செல்லம்மா, சீதை, ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22-05 93 இல் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

ஆசரிய மணி
செல்லையா வீதி,
அ. தெ. அளவெட்டி

தகவல் :
பிள்ளைகள்

[4948]

ஸ்ரீதர் திரையரங்கில்

In the Line of Duty

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி

நாளை முதல் (25-5-93)
முல்லை மாவட்டக் கலைஞர்களின்
"இது எங்கள் தேசம்"

[சி-6575]

தமிழக

என்றும் கேள்வி எழுப்பினார்.

மத்திய புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் அச்சிறையில் பணியில் இருந்ததாகவும், சார்ள்ஸ் தப்பியதில் அவருக்கும் பங்கு இருந்திருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாகவும் ஜெயலலிதா கூறினார்.

ராஜீவ் கொல்லப்பட்ட இடத்தில் ஹரிபாபுவின் முக்கிய கமராவை கைப்பற்றியது முக்கிய சாட்சியான கோடியாகாடு கண்முகத்தை கைது செய்தது போன்ற எல்லா உதவிகளையும் தமிழக காவல் துறை புரிந்ததாக ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

கற்பனைக் காரணங்களை காட்டி தம் அரசை கலைக்கவோ, அல்லது தமிழக சட்டப் பேரவை செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்தவோ சதி உருவாக்கப்படுள்ளதாகவே தாம் கருதுவதாக ஜெயலலிதா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த

ளைப் பெற்றபோதிலும் இவ் இரு கட்சிகளும் இணைந்து கூடுதல் ஆசனங்களைப் பெற்றமை தெரிந்ததே.

இடம்பெயர்ந்த

எனவும் கூறினர்.

இதனால் பல நாட்களாக மக்கள் தமது பொருள்களை இரு இடங்களிலும் பெறமுடியாத நிலை உருவாகியது.

இது தொடர்பாக பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியை அணுகியபோது அவர் தமது சங்கததின் அங்கத்தவர்கள் தாம் இதுவரை தமது நிவாரணப் பொருள்களை பெற்றுவந்த சங்கக்கிளைகளிலேயே தொடர்ந்தும் நிவாரண முத்திரைக்கான பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

## சங்காபிஷேகம்

(கொழும்புத்துறை)

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் சஹஸ்ர மகாசங்காபிஷேகம் நாளை செவ்வாய்க்கிழமை பகல் 11-00 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெற்று இரவு 7-00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் அதனைத் தொடர்ந்து அலங்காரப் பூந்தொட்டியில் பஞ்சமுக விநாகர் வெளி வீதி உலா வருதலும் இடம்பெறும். (24)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 24 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.